# இயேசு ஊழியங்கள்

105/229, எம்.டி.எச் ரோடு, வில்லிவாக்கம், சென்னை – 600 049
போன் : 044 - 4050 0000
ஈமெயில்: **beten.yatsar@angeltv.org** இணையதளம்: **www.jesusministries.org**

கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பு மகளே....

வானத்தையும் பூமியையும் படைத்த நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உங்களை வாழ்த்துகிறேன்.

சங்கீதம் 133:3 ல் "கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்." என்ற வாக்குத்தத்த வசனத்தோடு இம்மாதத்தை துவங்குவோம். கர்த்தருடைய ஆசீர்வாதம் என்பது மிகப்பெரிய பாக்கியம். ஆனால் கர்த்தரை உண்மையாய் தேடுகிறவர்களுக்கு மாத்திரம்தான் அந்த நன்மை கிடைக்கும். அப்படிப்பட்ட ஆசீர்வாதம் நம்முடைய வாழ்கையில் கிரியை செய்யமுடியாததினால் நம்மில் அநேகர் பலவிதமான சோர்வுகளில் சிக்கித்தவித்து கொண்டிருக்கிறோம். ஆனால் மேலேயுள்ள வசனத்தை நன்கு வாசித்து பாருங்கள். கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார் என்று எழுதப்பட்டிருக்கிறது.

மேலேயுள்ள வசனத்தில், "என்றென்றைக்கும்" என்ற வார்த்தையை சற்று தியானித்துப் பாருங்கள். பொதுவாக நாம் வேதத்தைப் படிக்கும்போது இப்படிபட்ட வார்த்தைகளை நன்கு தியானிக்கவேண்டும். "என்றென்றைக்கும்" என்ற வார்த்தை நித்தியமானது அல்லது முடிவில்லாதது என்று அர்த்தம் கொள்ளும். அப்படியென்றால் நீங்கள் எந்த சூழ்நிலையில் இருந்தாலும் கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார் என்ற வார்த்தையை விசுவாசித்தால் அற்புதம் நடக்கும். ஆசீர்வாதம் மாத்திரம் அல்ல ஜீவனையும் கட்டளையிடுகிறார். ஜீவன் என்ற வார்த்தைக்கு உயிர் என்று அர்த்தமாகும். அவர் நமக்கு என்றென்றைக்கும் உயிர் கொடுக்கிறவர். இதை கேட்கும்போதே எவ்வளவு மகிழ்ச்சியாய் இருக்கிறது அல்லவா? அப்படியானால் நீங்கள் சுமந்துகொண்டிருக்கும் குழந்தைக்கு ஜீவனை கொடுத்தவர் யார்? நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. தாயின் கருவில் உருவாவதற்கு முன்னமே அவர் நம்மை நினைத்திருக்கிறார். நம்மேல் உயிராயிருக்கிறார். பாருங்கள், எவ்வளவு அருமையான தெய்வத்தை நாம் வணங்கிக்கொண்டிருக்கிறோம். இதுவரைக்கும் நம்மை கைவிடாத தெய்வம் இனிமேலும் கைவிடுவாரா? நிச்சயம் கைவிடவேமாட்டார். அவர் நிச்சயம் உங்களையும் உங்கள் கருவில் இருக்கும் குழந்தையையும் ஆசீர்வதிப்பார்.

மேலும் ஜெப உதவிக்கு எங்களை தொடர்புகொள்ளுங்கள் : 9003009752

அன்புடன்

சாது சுந்தர் செல்வராஜ

**குறிப்பு** : உங்கள் ஏஞ்சல் டிவி-யில் பெட்டன் யாட்சார் நிகழ்ச்சி ஒவ்வொரு புதன் கிழமை மதியம் 3 மணிக்கும், அதன் மறுஒளிபரப்பு ஞாயிற்றுக் கிழமை மாலை 5:30 மணிக்கும் ஒளிபரப்பாகும். காணத்தவறாதீர்கள்.